# க்ரியாடினின்






BP, Sugar எல்லாம் இப்போது தமிழ் வார்த்தையாகவே ஆகிவிட்ட நிலையில். க்ரியாட்டினின் என்பது சிறுநீரகத்தின் செயல் திறனைக் குறிக்கும் முக்கிய அளவுகோல் என்பது தெரியாது. க்ரியாடினின் பற்றி தெரிந்து கொள்வோமா?



## க்ரியாடினின் என்பது தசையின் அசைவினால் உற்பத்தியாகும் கழிவுப் பொருள்



CREATININE TEST



இதனை சிறுநீரகம் தான் தினமும் இரத்தத்தில் இருந்து பிரித்து வெளியேற்றுகிறது. எனவே சிறுநீரகத்தின் செயல் திறன் குறையும் போது இந்த கழிவுப்பொருள் இரத்தத்தில் அதிகரிக்கிறது. இதனைத் தான் உப்பு சத்து கூடி விட்டது என்று கூறுகிறார்கள். ஆகவே இரத்தத்தில் அளவு கூடினால் சிறுநீரக பாதிப்பு உள்ளதை கூறுகிறது.

srsspecialityclinic@gmail.com +91 9444 585 504 srsspecialityclinic.com

# க்ரியாடினின்

## நாம் சாப்பிடும் உப்பும் இரத்தத்தில் கூடும் உப்பு சத்தும் ஒன்றல்ல என்று தெரிந்து கொண்டீர்களா!





## சிறுநீரில் புரதம் கழிதல்

சிறுநீரக பாதிப்பு இருந்தால், சிறுநீரில் புரதம் வீணாகும். சிறுநீர் கழிக்கும் போது (சோப்பு நுரை போல்) நுரைத்து போகும். இதை ***Urine Protein Test*** மூலம் கண்டுபிடிக்கலாம்.



## யார் பரிசோதித்துக் கொள்ள வேண்டும்?

- இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் இருப்பவர்கள்.
- வீட்டில் யாருக்கேனும் சிறுநீரக பாதிப்பு உள்ளவர்கள்.
- தொடர்ந்து வலி நிவாரணிகள் உட்கொள்பவர்கள்.

## எப்படி பரிசோதித்துக் கொள்ள வேண்டும்?

வருடம் ஒரு முறையேனும், இரத்தத்தில் க்ரியாடினின் (Serum Creatinine) மற்றும் சிறுநீரில் புரதம் (Urine Albumin) பரிசோதனையை மேற்கொள்ள வேண்டியது அவசியம். பரிசோதனைகள் மட்டுமல்லாது, சிறுநீரக பாதுகாப்புக்கான ஆலோசனைகளையும் மருத்துவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

srsspecialityclinic@gmail.com +91 9444 585 504 srsspecialityclinic.com